*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 481- 483, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# தஞ்சை மராட்டியர்களின் செப்பேடுகள் மூலம் அறியலாகும் வரலாற்று செய்திகள்- ஓர் ஆய்வு

சு. விமலா
வரலாற்றுத்துறை, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

## Abstract

தஞ்சாவூர் மராத்திய அரசு சோழ மண்டலத்தை ஆண்ட மராத்தியர்களின் அரசாகும். இவர்களின் தலைநகரம் தஞ்சாவூர் ஆகும். போன்சலே குலத்தில் பிறந்த சத்ரபதி சிவாஜியின் இளைய தம்பி வெங்கோஜி என்ற ஏகோஜி என்பவர், தஞ்சாவூரை தஞ்சை நாயக்கர்களிடமிருந்து 1674இல் கைப்பற்றி தஞ்சாவூர் மாராத்திய அரசை நிறுவினார். இவரின் வழித்தோன்றல்கள் தஞ்சை மராத்திய அரசை 1855 முடிய அரசாண்டனர். மராட்டியர் காலத் தமிழை இலக்கியங்கள் மட்டும் அன்றிக் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஆவணங்கள் போன்றன கொண்டும் அறிய முடியும். மராத்தி மொழிக் கல்வெட்டுகள் நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பட்டன. அரசு ஆவணங்கள் பல மோடி எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளன. செ.இராசு அவர்கள் எழுதியுள்ள தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் என்ற தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் இரு நூல்களைக் கொண்டும் மராட்டியர் காலத் தமிழ்மொழியை ஓரளவு அறிந்து கொள்ள இயலும்.

**குறிச்சொற்கள்:** நாகரி, கல்வெட்டுகள், தஞ்சை மராட்டியர், செப்பேடுகள்

**முன்னுரை**

தஞ்சை மராட்டியர் மரபு மராட்டிய போன்ஸ்லே மரபில் தோன்றியவர் சாதாராக் கோட்டைத் தலைவர் சாசி. அவர் பீசப்பூர்ச் சுல்தானின் படைத் தலைவராகத் தென்னகத்தில் படையெடுத்துப் பெற்ற வெற்றியின் பெங்களூர்ப் பகுதியைச் சாகீராகப் பெற்றார். பெங்களூர்க் கோட்டையில் காரணமாகப் தங்கி ஆட்சி புரிந்த அவர், தம் மூத்த மனைவியின் இளைய மகனான ஏகோசியை கி. பி. 1640இல் பெங்களூரின் இளவரசராக ஆக்கினார் பூனா, சாதாரா பகுதியைத் தன் இளைய மனைவியின் மூத்த மகன் சிவாசிக்கு அளித்தார் மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கர், தஞ்சை மன்னர் விசய ராகவ நாயக்கரின் மகளை மணம் செய்துகொள்ள விரும்பினார். தஞ்சை நாயக்கர் பெண் கொடுக்க மறுக்கவே தஞ்சைக்கும் மதுரைக்கும் பகை ஏற்பட்டுத் தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலில் பெரும்போர் மூண்டது. போரில் விசய ராகவ நாயக்கரும், அவர் மகன் மன்னாரும் இறந்தனர். தஞ்சை, மதுரை நாயக்கர் வசமாயிற்று. மதுரை நாயக்கர் சார்பில் அழகிரி நாயக்கர் தஞ்சையில் ஆட்சி புரிந்தார். மிகச் சிறந்த ஆதாரங்களை நடுநிலையோடு அளிக்கின்ற மக்கென்சி ஏகோசியின் ஆட்சி தர்ம நியாயமாகவும் சுபிட்சமாகவும் நடைபெற்றது என்றும், வர்த்தகர் உட்பட அனைவரும் சவுக்கியத்துடனே இருந்தனர் என்றும், கூறுகின்றார். இதை அவர் காலச் செப்பேடுகளும் உறுதிப்படுத்து கின்றன. ஏகோசிக்குப் பின் தஞ்சையை ஆட்சிபுரிந்த தஞ்சை மராட்டிய மரபின் அரசர்களை அடுத்துள்ள பட்டியலில் காணலாம்.

**தஞ்சை மராட்டியர் வரலாற்று முயற்சி**



*©2023 by* KRISHMA PUBLICATION

1676 முதல் 1855 வரை தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்தனர் சுமார் 180 ஆண்டுகள் 13 அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்த பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் வரலாறுகள் ஆராய்ச்சி அறிஞர் பலரால் நன்கு ஆராயப்பட்டு நூல்கள் எழுதியிருப்பது போலத் தஞ்சை மராட்டியர் வரலாறு இன்னும் சரியான அளவுடன் முழுமையாக ஆராயப்படவில்லை. 1928 இல் கே.ஆர் சுப்பிரமணியம் அவர்கள் 'தஞ்சை மராட்டிய அரசர்கள்' (The Maratha Rajas of Tanjore) என்னும் தன் ஆங்கில நூலை வெளியிட்டார் பின் 1944ஆம் ஆண்டு சி. கே. சீனிவாசன் அவர்களின் கர்நாடகப் பகுதியில் மராட்டியர் ஆட்சி' (Maratha Rule in the Carnatic) என்னும் ஆங்கில நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடாக வந்தது. டாக்டர் என். சுப்பிரமணியம், டாக்டர் கே. ராஜய்யன் இருவரும் தனித் தனியாக எழுதியுள்ள தமிழக வரலாறு (1565 முதல் 1956வரை) என்னும் ஆங்கில நூலிலும் தஞ்சை மராட்டியர் வரலாறு பற்றி ஓரளவு எழுதி யுள்ளனர். இவை அனைத்தும் கிழக்கிந்தியக் கம்பெனிக் காலத்தின் சில ஆவணங் களைக் கொண்டும், வெளிநாட்டுப் பாதிரிமார்கள், சில பயணிகள் எழுதிய கடிதங்களையும், குறிப்புக்களையும் மட்டுமே வைத்துக்கொண்டு எழுதப் பெற்றவையாகும். எனவே தஞ்சை மராட்டியர் பற்றிய முழுமையான உண்மை வரலாற்றை இந்த நூல்களில் நாம் காண முடியாது. அஃது இந்நூல்களை எழுதிய ஆசிரியர்களின் குறையாகாது. கிடைத்த சான்றுகளை மட்டும் வைத்துக் கொண்டு திறம்பட இவர்கள் எழுதியுள்ளனர் என்று கூற இயலும்.

**செப்பேடுகளின் அமைப்பு**

தமிழகத்தில் கிடைத்துள்ள பல்லவர், பாண்டியர். சோழர்களின் செப்பேடுகள் அனைத்தும் ஓலைச்சுவடிகளின் வடிவத்தை ஒத்துக் காணப்படு கின்றன. அவை பல ஏடுகளாகவும் இருக்கும். ஆனால் தஞ்சை மராட்டியரின் செப்பேடுகள் அனைத்தும் நீண்ட சதுர வடிவில் ஒரே ஏடாகப் பெரிதாகக் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் இரண்டு பக்கங்களிலும் எழுதப் பெற்றிருக்கும். இந்தச் செப்பேடுகளின் அமைப்புமுறை வட இந்தியச் செப்பேடுகளின் அமைப்பை ஒட்டித் தோன்றியன என்று ஆய்வாளர் டி.சி.சர்க்கார் அவர்கள் கருதுகிறார்கள். பொதுவாகத் தமிழக அரசர்களின் செப்பேடுகளில் காணப்படும் மூன்று இன்றியமையாச் செய்திகள் தஞ்சை மராட்டியர் செப்பேடுகளில் எவற்றிலும் இல்லை: இச்செப்பேடுகளில் அரசர்களின் பரம்பரையையும், வெற்றி, கொடைச் சிறப்புக்களையும் கூறும் 'பிரசஸ்தி' எனப்படும் மெய்க் கீர்த்திப் பகுதிகள் இல்லை. பிற கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் அதனோடு தொடர் புடைய அரசர்கள் பட்டம் ஏற்ற ஆண்டிலிருந்து தொடங்கும் ஆட்சியாண்டு கூறப்பெற்றிருக்கும். ஆனால் இம் மராட்டியர் செப்பேடுகளில் எந்த அரசருக் கும் தனியாக ஆட்சியாண்டு கூறப்பெறவில்லை.

பிற செப்பேடுகளிலும், மெய்க்கீர்த்திகளிலும் அரசர் தம் தாயார், பட்டத்து அரசி, அல்லது அரசியர் சிறப்பித்துக் கூறப்படுவர். மராட்டியர் செப்பேடுகள் எதிலும் அரசருடன் இணைத்து அரச குடும்பத்துப் பெண்கள் எவரும் கூறப்பெறவில்லை.) மராத்தி, வடமொழி, மோடிச் செப்பேடுகள் நீங்கலாகத் தமிழ்ச் செப் பேடுகள் பெரும்பாலும் செப்பேட்டோடு தொடர்புடைய அந்தந்தக் கோயிலின் இறைப்படிமங்களின் வரைகோட்டு ஓவியங்களைப் பெற்றிருப்பது இவைகளின் தனிச் சிறப்பாகும். தங்களுக்கு முன்பு சோழநாட்டை ஆட்சிபுரிந்த சோழர், விசயநகர அரசர்,தஞ்சை நாயக்கர் ஆகிய மரபினரைப் பல செப்பேடுகள் கூறுவதும் அவ்வாறே சிறப்புடைய செய்தியாகும். வரலாற்றுக் குறிப்புக்களைத் தருவதுடன் அக்காலத்தின் எழுத்து முறை, ஓவியர்கள், ஓவியங்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்யவும் துணை புரிவதோடு, மராட்டியர் காலக் கலைநிலையை அறியவும் அவை பெருந்துணை புரிகின்றன.

**காலக்குறிப்பு**

பெரும்பாலான செப்பேடுகளில் கலியுக ஆண்டும். சாலிவாகன சக ஆண்டும் தனியாகவோ அல்லது இரண்டுமோ குறிக்கப் பெற்றுள்ளன. ஒரு செப்பேட்டில் கி. பி. ஆண்டும், குறிக்கப்பெற்றுள்ளது. ஒரு செப்பேட்டில் விக்கிரமாங்கத சகாப்த ஆண்டும். மோடிச் செப்பேடுகளில் பெரும்பாலும் 'சுகர்சன்' ஆண்டுமுறையும் குறிக்கப் பெற்றுள்ளன. செப்பேட்டில் காணும் ஆண்டுகளுக்கேற்ற நேரான கி.பி .ஆண்டு கிடைக்கக் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும். கலியுக சகாப்த ஆண்டு குறிக்கப் பெற்றிருந்தால் அவ்வாண்டிலிருந்து 3101ஐக் கழித்தால் அதற்கு நேரான கி. பி. ஆண்டு கிடைக்கும். ஏனெனில் கி.மு. 3101இல் சுலியுக ஆண்டு ஏற்பட்டது. (கலியுகம் 4802-3101-கி. பி. 1701; செப்பேடு 4). சாலிவாகன சகாப்த ஆண்டு குறிக்கப் பெற்றிருந்தால் அதனுடன் 78 ஐக் கூட்டினால் அதற்கு நேரான கி. பி. ஆண்டு கிடைக்கும். ஏனெனில் கி. பி. 78ஆம் ஆண்டு சாலிவாகன சக ஆண்டு தோன்றியது. (சாலிவாகன சகாப்தம் 1641+78 = கி. பி. 1719; செப்பேடு 7). சுகர்சன் ஆண்டு குறிக்கப் பெற்றிருந்தால் அதனுடன் 599ஐக் கூட்டினால் அதற்கு நேரான கி. பி. ஆண்டு கிடைக்கும். கி.பி. 599இல் சுகர்சன் ஆண்டு குறிக்கும் முறை ஏற்படுத்தப் பெற்றது. (சுகர்சன் ஆண்டு 1140 + 599 = கி. பி. 1739; செப்பேடு 35.
விக்கிரமாங்கத சகாப்த ஆண்டு குறிக்கப் பெற்றிருந்தால் அதிலிருந்து 56ஐக் கழித்தால் அதற்கு நேரான கி.பி. ஆண்டு கிடைக்கும். (விக்கிரம ஆண்டு 1710- 56 - கி. பி. 1654; செப்பேடு 50). கி.பி.56 ஆம் ஆண்டு விக்கிரமாங்கத சகாப்தம் ஏற்பட்டது.

தமிழ்ச் செப்பேடுகளில் முதல் செப்பேட்டைத்தவிர அனைத்திலும் ஆண்டுகளைக் குறிக்கத் தமிழ் எண்களே பயன்படுத்தப் பெற்றுள்ளன பெரும்பாலும் தமிழ் ஆண்டு, மாதம், தேதி, நாள், நட்சத்திரம் இவை குறிக்கப் பெற்றிருப்பதால் எந்த நாள் செப்பேட்டில் கண்ட

கொடை அளிக்கப் பெற்றது என்பதை எளிமையாகக் காணமுடிகிறது. சாலியவாகன சகாப்தம் 1657 கலியுக சகாப்தம் 4836 இதில் செல்லா நின்ற நாளது ராட்சத வருடம் ஆவணி மாதம் 15ஆம் தேதி பூருவபட்சம் தசமி சனிவாரம் மூல நட்சத்திரம்' என்பது ஒரு செப்பேட்டுப் பகுதி. இதற்கு நேரான கி.பி. ஆண்டு 1735 ஆகஸ்டு மாதம் 16 ஆம் நாள் ஆகும் (எண்-10).

**சமய ஒருமைப்பாடு**

தஞ்சை மராட்டியர் செப்பேடுகளில் ஒன்றைத் தவிர எல்லாமே சைவ சமயச்சார்பு உடையவைதாம். இருப்பினும் சமயப் பூசல் மராட்டியர் காலத்தில் பெரும்பாலும் ஏற்படவில்லை என்பதைச் செப்பேடுகள் மூலம் அறிகின்றோம். துளசா மன்னன் ஒரு செப்பேட்டில் 'சிவாலய பூஷண அலங்காரன், விஷ்ணு ஆலய உத்தண்டன்' என அழைக்கப்பெறுகின்றான் (எண் - 3). மன்னார்குடி செயங்கொண்டநாத ஈசுவரர்கோயிலுக்குரிய செப்பேட்டில் கூறப் பெற்றுள்ள காப்புரையில் சைவ-வைணவ ஒருமைப்பாட்டினைக் காணுகின் கின்றோம் (எண் - 22). 'இந்த தர்மத்தை யாதா மொருவர் பரிபாலனம் பண்ணினால் காசியிலே கோடி சிவலிங்கப் பிரதிஷ்டையும் கோடி விஷ்ணு பிரதிஷ்டையும் அனேக அசுவமே தங்கும் பண்ணிவிச்ச பலத்தையடை வார்கள். யாதாமொருவன் விகாதம் செய்தானாகில் கெங்கைக் கரையிலே அனேகமான சிவாலயங்கள் விஷ்ணு தலங்களை கெடுத்த பாவத்திலே போவானாகவும்' என்பன அவ்வரிகளாகும். அதே சிவாலயத்தைச் சேர்ந்த மற்றொரு செப்பேடு 'ஸ்ரீராம ஜெயம்' என்ற தொடருடன் முற்றுப் பெறுகிறது (எண்-23). வைத்தீசுவரன் கோயிலில் முதலாவது சரபோசி காலத்துச் செப்பேடு ஒன்றில் 'திருநீறு திருநாமத்துக்கு உள்ளான சகலமான பேருக்கும் இந்த தர்மம் பொதுவானது' என்ற தொடர் காணப்படுகிறது.

**முடிவுரை**

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் ஆதரவாலும் பல நூல்கள் வெளிவந்தன. சமயச் சான்றோர்கள் தோன்றிச் சிறந்த நூல்களைப் படைத்தனர். பழைய சமய நூல்களுக்கு விரிவான விளக்கம் அளித்தனர். புலவர்கள் தல புராணங்களைப் பாடி அந்தந்த ஊர் மக்களை மகிழ்வித்தார்கள். சிறு சிறு நூல்கள் இயற்றி ஆங்காங்கே இருந்த செல்வர்களையும் சிற்றரசர்களையும் மகிழ்வித்தார்கள். அரசையும், செல்வரையும் பொருட்படுத்தாது வாழ்ந்த சித்தர் என்னும் ஒருவகை ஞானிகள் உயர்ந்த தத்துவப் பாடல்களை அனைவரும் புரிந்து கொள்ளுமாறு எளிய தமிழில் பாடினர். தத்துவராயர் முதலான ஞானிகளும் வாழ்ந்து உலகியல் கடந்த ஞானப் பாடல்கள் பாடினர். கி.பி. 1676இல் ஏகோஜி என்னும் மராட்டிய மன்னன் தஞ்சையைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்த பின்னர், ஏறத்தாழ நூற்று எண்பது ஆண்டுகள் மராட்டியரது ஆட்சி நடைபெற்றது அக்காலக் கட்டத்தில் தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி ஆகிய மொழிகளில் எல்லாம் பல்வேறு இலக்கியங்கள் எழுதப்பட்டன. தஞ்சை சரபோஜி மன்னர் உலகப் புகழ் வாய்ந்த நூலகமான சரசுவதி மகாலை உருவாக்கியதால் பல நன்மைகள் ஏற்பட்டன. இலக்கியம், இசை, நடனம், வேதாந்தம், காவியம், மருத்துவம், வானவியல் தொடர்பான பல சுவடிகள் அவர் காலத்தில் தொகுக்கப்பட்டன. கிடைத்தற்கு அரிய நூல்கள், நாணயங்கள், ஓவியங்கள், பழஞ்சுவடிகள் பல கண்டறிந்து தொகுக்கப்பட்டன.

இம்மராட்டியரது ஆட்சிக் காலத்திலே தூது, உலா, நாடகம், கோவை, சதகம், அம்மானை, புராணம், சாத்திரங்கள் என இவை தொடர்பான எழுபது நூல்கள் தோன்றி, தமிழைச் சிறந்தோங்கச் செய்தன. புலவர்கள் முயன்றி ருந்தால் ஒப்பற்ற பெரிய காப்பியங்களையும் இயற்றியிருக்க முடியும். சில நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அரசியல் தாக்கத்தால் இலக்கியப் படைப்பில் பெரும்பயன் விளையவில்லை. எனினும், சிறிய அளவிலேனும் படைப்புகள் வெளிவந்த வண்ணம்தான் இருந்தன. மராட்டியர் காலத் தமிழை இலக்கியங்கள் மட்டும் அன்றிக் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஆவணங்கள் போன்றன கொண்டும் அறிய முடியும். மராத்தி மொழிக் கல்வெட்டுகள் நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பட்டன. அரசு ஆவணங்கள் பல மோடி எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளன. செ.இராசு அவர்கள் எழுதியுள்ள தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் என்ற தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் இரு நூல்களைக் கொண்டும் மராட்டியர் காலத் தமிழ்மொழியை ஓரளவு அறிந்து கொள்ள இயலும்.

**ஆதாரங்கள்**


1. 'The Maratha Rajas of Tanjore' by K.R.Subramanian, 1928.
2. செ.இராசு, தஞ்சை மராட்டிய கல்வெட்டுகள், ப. 132.
3. போன்ஸ்லே வம்ச சரித்திரம், ப. 136
4. செ.இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், ப. 137
5. கே.எம். வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், ப. 274
6. தஞ்சை மராட்டிய மன்னர் ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் முதல் தொகுதி, ப. 92.


******